# ஞான விளக்கம்





புதுச்சேரி ஞானாசிரியர் திரு. பா. கமலக்கண்ணன்

# ஞான விளக்கம்

எழுதியவர்

**பா. கமலக்கண்ணன்**
e-mail : kamalakkannan1932@gmail.com
www.ramalingaperumanar.com
தொலைபேசி : 91 - 413 - 2248046

**வெளியிடுவோர் :-**
அருட்பெருஞ்சோதி தியான கூடம்
முதியோர் சரணாலயம்
மொரட்டாண்டி, ஆரோவில் அஞ்சல்
பாண்டிச்சேரி - 605 101



டாக்டர்
அருள்திரு **பொன். ஆறுமுகம் பிள்ளை** R.H.M.P.
புதுக்கோட்டை.

உ
கடவுள் துணை.

## ஆசியுரை

திருவருள் தாயின் கருணையாலும் பெரியோர்கள் ஆசியாலும் எமது மைந்தன் பா.கமலக்கண்ணன் இயற்றியுள்ள "ஞானவிளக்கம்" என்னும் இந்த நூலில் அறிவுக்கு நல்ல வேலை கொடுத்திருக்கிறார். முறையோடு ஞானத்தைக் கற்க விரும்பும் மாணாக்கர்களுக்கு, இந்த நூல் நல்ல பாடமாக அமையும். நூலை இயற்றிய மைந்தனுக்கும் இதைக் கருத்தோடு கற்றுப் பயன்பெறுவோருக்கும் எமது ஆசிகள்.

புதுக்கோட்டை,
28-3-1985.

உ

ஓம் சக்தி

# முன்னுரை

"அறியாத பாவிக்கு ஞானமேது?
ஆறுமுகன் சொன்னதொரு நூலைப்பாரு"

- இவ்வாறு காகபுசுண்டர் தமது 68-வது ஞானப்பாடலில் கூறுகிறார். அவர் யாரை முன்னிலைப்படுத்திக் கூறுகிறார்? ஆறுமுகன் என்பவர் யார்? இது புதிராக உள்ளது.

என் குருநாதர், புதுக்கோட்டை அருள் திரு. ஆறுமுகன் அவர்கள் 1968-ஆம் ஆண்டில் பதினெண் சித்தர் பாடல் தொகுப்பை என்னிடம் தந்து, இதில் அடங்கியுள்ளக் கருத்துக்களை வரிசைப்படுத்தினால் ஞானம் விளங்கும் என்று சொல்லி ஆசிர்வதித்தார்கள். ஆகவே காகபுசுண்டரின் அருள்வாக்கு எளியேனுக்கும் பொருந்துவதைப் பெறுதற்கரியப் பேறாகக் கருதுகிறேன்.

ஞானம் அடைய வேண்டும்; பிறப்பை அறுக்க வேண்டும் என்பது எளியேனின் குறிக்கோள். எனவே, ஞான வேட்கையோடு, கடந்த 18 ஆண்டு காலமாகப் பதினெண் சித்தர் பாடல்களை நுணுகி ஆராய்ந்தேன். குருநாதர் வாக்கின்படி பல்வேறு தலைப்புகளில் பாடல்களைத் தொகுத்து, வரிசைப்படுத்தினேன்.

ஒவ்வொரு பொருள் பற்றியும் பல சித்தர்கள், பல பாடல்களில் சொல்லியிருப்பதைச் சுருக்கி, எளிய தமிழில் எழுதும் எண்ணம் உதித்தது. எளியேனின் சிற்றறிவால் இயலுமா? எனினும் முயன்றேன். விண்டுரைக்க இயலாத விந்தை! அன்னை ஆதி பராசக்தியின் அருட்பெருங்கருணை, எளியேனை இயக்கிப் பல பாடல்களை இயற்றச் செய்வதை உணர்ந்தேன். அறியாத பாவிக்கு அருளொடு ஞானம் விளக்கிய அன்னையின் அருட்பதம், சென்னியில் சேர்த்து மெய்யால் வணங்குகிறேன்.

இந்நூல் ஞானத்தைப் பற்றியப் பல பேருண்மைகளை வெளிப்படையாக விளக்குகின்றது. பிரம இரகசியம் மட்டுமே சிற்சில பாடல்களில் பரிமொழியில் கூறப்பெற்றுள்ளது.

இந்நூல் கூறும் விளக்கமெலாம், சித்தர்கள், ஞானிகள் வாக்காகும். தேன் கூடுகளிலிருந்து தேனைத் திரட்டியது போன்றதே எளியேனின் செயல். ஒவ்வொரு தலைப்புக்கும் ஆதாரமான சித்தர் பாடல்கள் பொருளடக்கத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளன. கருத்தூன்றிக் கற்கும் மெய்யன்பர்கள் பயன் பெறுவர்.

இந்நூலைக் கண்ணுற்று அகமகிழ்ந்து ஆசீர்வதித்ததோடு, புதுக்கோட்டையில் சமாதியில் அடங்கியுள்ள தமது குருநாதர் முத்தால் ராவுத்தர் மற்றும் பொற்பனைக்கோட்டை முனீஸ்வரர் ஆகியோரது அருளாசியையும் பெற்றுத் தந்த என் குருவின் திருவடிகளை மனம், மொழி, மெய்யால் வணங்குகிறேன்.

இந்நூலைக் கண்ணுறும் ஞானிகள், எளியேனையும் இதனைப் பயில்வோரையும் ஆசீர்வதிக்கத் திருவடி தொழுகின்றேன்.

ஓம். ஓம். ஓம்.

மயிலாடுதுறை
4-5-1985
குரோதன, சித்திரை 22. **பா.கமலக்கண்ணன்.**

**<u>சமர்ப்பணம்</u>**

அன்னை **ஆதி சக்தி** அருட்பதம்,
என்னருங் **குரு**பதம், இறைநிலை **முனீஸ்வரர்**,
முன்னவர் **முத்தால் ராவுத் தர்**பதம்
இந்நூல் என்றும் இலங்கிடச் சமர்ப்பணம்.

**பா.கமலக்கண்ணன்.**

## காப்பு

அத்தி முகத்தனை சத்தி முருகனை
வித்தக வாணியை சற்குரு நாதனை
புத்தியில் வைத்தே அத்தன் அடிக்கீழ்
முத்தி பெறுநெறி உத்தியாய் அறிவோம். 1

உதிக்கும் ஞானம் உயர்ந்து விளங்கிட
துதிக்கும் **ஆறு முகக்**குரு துணையொடு
பதினெண் சித்தர் பாடலைக் கடைந்து
கதிபெறத் திரட்டிய கற்பம் இதுவாம். 2

சென்னியில் ஒளிரும் செம்பொருள் பிரம்மமாம்
அன்னவன் ஆதி பகவன் இயக்கிட
உன்னத உய்வழி **ஞான விளக்கமாம்**
இந்நூல் இயற்றினன் கமலக் கண்ணன். 3

ஓம்

## 1. ஐந்தெழுத்து

ஐந்தெழுத்து என்பது ஐந்தொழில் தெய்வமாம்;
ஐந்தெழுத்து என்பது ஐவகைப் பூதமாம்;
ஐந்தெழுத்து ஆக்கமே அனைத்துயிர் இனங்கள்
ஐந்தெழுத்து அடங்குமே ஆதி பரம்பொருள். 1

## 2. ஐந்தொழில் தெய்வங்கள்

**ந**காரம் பிரம்மன்; **ம**காரம் நாரணன்;
**சி**காரம் உருத்திரன்; **வ**காரம் மகேஸ்வரன்;
**ய**காரம் சதாசிவ அதிப னாமென
மகாதவ ஞானியர் மயர்வற மொழிந்தனர். 2

ஆதி பரம்பொருள் அருளால் மனுக்குலம்
ஓதி உயர்வாய்ப் படைத்தல் பிரம்மன்;
தீதிலார் காத்தல் திருமால் தொழிலாம்
நீதி நிறுவிட அழிதொழில் உருத்திரன். 3

மறைந்துள விதிப்பயன் மகேஸ்வரன் செயலாம்;
இறையடி எய்திட அருளல் சதாசிவம்;
முறையாய் ஐந்தொழில் முடிக்கும் ஐவரும்
உறைவர் உடம்புளும் உயிருள வரையே. 4

## 3. ஐம்பூத அமைப்பு

**ந**கார மென்றே நவின்றது பிருத்வி;
**ம**கார மென்றது மல்கிய அப்பு;
**சி**கார வகாரம் தேயு; வாயு;
**ய**கார மென்றது ஆகா யமாமே. 5

**ந**கார மண்ணே நல்லுட லானது;
**ம**கார நீரே மன்னிய இரத்தம்;
**சி**காரம் உடலில் தீயாய் இருப்பது;
**வ**காரக் காற்றே வயங்கும் மூச்சு. 6

அலைமனம் **ய**கார ஆகா யமாமே
நிலையாய் ஐந்தும் நின்று தொழிற்படக்
கலையால் இயங்கும் கடத்துளே **கடவுளாய்த்**
தலையில் தங்குமே ஆதி பரம்பொருள். 7

## 4. உடலின் தோற்றம்

உலகில் உதித்தது ஒண்பொருள் வழியாம்;
நிலவும் ரவியும் நீவிட மெய்யாம்;
அலகில் ஆதியாம் அதுவும் உச்சியும்;
தலமாம் கொப்பூழ் தாங்கிய துயிரே. 8

உடல்தான் மூன்றாம்; உள்ளது தூலம்;
கடத்தில் கரவாய் ஒளிர்வது சூக்குமம்;
சுடரொளிர் சுயம்புப் பொருளே காரணம்;
அடக்கம் அடைந்திட அருள்வது இலிங்கமாம். 9

தன்னுடல் தானே தத்துவ விளக்கம்;
தன்னுடல் தானே தாணுவாம் ஆலயம்;
தன்னுடல் தானே தற்சிவ லிங்கம்;
தன்னுடல் தக்குதல் தன்னுடை தவத்தால். 10

## 5. உடலின் நவக்கோள்

உடலில் நவக்கோள் உறுதல் கேட்கின்,
உடலாம் சந்திரன்; உயிரே சூரியன்;
கடத்தில் கட்புலம் செவ்வாய் செயலாம்;
சடத்தில் பரிசச் சத்தியே புதனாம். 11

நறுமணம் உணர்த்துதல் நற்குரு செயலாம்;
அறுசுவை அறிநா சுக்கிரன் செயலாம்;
உறுசெவி ஓசை உணர்த்துதல் சனியாம்;
ஒறுக்கும் குதத்தை ஓங்குதல் இராகு. 12

குறியாம் குய்யம் கேது செயலாம்;
பொறிகள் அனைத்திலும் பொருந்தி நின்று,
நெறியோடு நவக்கோள் நியமம் செய்தலை
அறிந்து தெளிதல் அறிவின் கடனே. 13

## 6. தொண்ணூற்றாறு தத்துவங்கள்

எண்ணிய தத்துவம் தொண்ணூற் றாறில்
எண்மூன் றாமே ஏற்புடை ஆன்மம்;
மண்டலம் மூன்று; மலமும் மூன்று;
விண்டிட விகாரம் எட்டே யாகும். 14

உடலை இயக்கும் வாசல் ஒன்பது
அடர்ந்து தொழிற்படும் கோசம் ஐந்து;
கடத்தைக் காக்கும் தாது ஏழு;
உடற்பிணி மூன்று; உளகுணம் மூன்றாம். 15

உடலில் ஒன்றிய வாயு தசமாம்;
உடலை ஓம்பும் நாடியும் தசமாம்;
நடத்தும் அவத்தை நாலோ டொன்று
அடல்மிகு ஆதா ரங்கள் ஆறாம். 16

குறிகொள் ஆன்மம் கூறக் கேட்கின்
அறிவும் நினைவும் அலைவுறு மனமும்
பொறியைப் பொருதும் அகங்கா ரமுமே
அறிந்திட நான்கு அந்தக் கரணமாம். 17

நெருப்பு நிலம் நீர் காற்றொடு விசும்பும்
அரும்பெரும் ஐந்தும் பூதங் களாகும்;
கருவாம் மெய்வாய் கண்செவி மூக்கும்
அருள்நிறை ஐந்து ஞானேந் திரியமாம். 18

வாக்கு கைகால் வன்குதம் குய்யம்
காக்கும் ஐந்து கன்மேந் திரியமாம்
சூக்குமச் சுவையொளி ஊறொலி நாற்றம்
ஆக்கும் ஐந்து தன்மாத் திரைகளாம். 19

மண்டலம் அக்கினி மதியொடு ரவியும்
கண்டிடக் கடத்தில் இருப்பது மூன்றாம்
மண்டிடும் ஆணவம், கன்மம், மாயை,
திண்ணிய தீய மலங்கள் மூன்றாம். 20

கொண்டிடும் காமம் குரோதம் உலோபம்
முண்டிடும் மோகம் மதமாச் சர்யம்
அண்டிடும் அகந்தை யுடனே இடம்பம்
எண்ணிட விகாரத் தத்துவம் எட்டாம். 21

இருகண், இருசெவி, இருதுளை நாசி
அருள்தரும் ஒருவாய், அகற்றும் எருவாய்
கருவாய் ஒன்று, கணக்கிட ஒன்பதாய்
இருக்கும் உடலின் வாசல் இவையாம். 22

அன்னக் கோசம் ஆனந் தமயம்
பின்னமில் பிராணன், விக்யான் கோசம்
மன்னிய மனோமயக் கோசம் சேர்ந்திட
இன்னணம் கோசம் இருப்பது ஐந்தாம். 23

இரத்தம், கொழுப்பு, எலும்பு, மாமிசம்
இரசம் இறையுறை அருந்திறல் மூளை
கரவாய் இருந்தே கசியும் இந்தியம்
நரனுடல் நடத்தும் எழுவகைத் தாதுவாம். 24

கண்டிடும் வாதம், கபத்தொடு பித்தம்,
நண்ணும் பிணிகள் நவின்றிட மூன்றாம்
எண்ணிடக் குணங்கள் சத்துவம் இராஜசம்
சண்டியாம் தாமசம் சார்ந்திட மூன்றாம். 25

உடலில் பிராணன், உதானன், வியானன்
கிடத்தும் தேவ தத்தன், கிருகரன்
சடம்நிலைச் சமானன், கூர்மன், அபானன்
நடத்தும் தனஞ்செயன், நாகன் தசக்கால். 26

திடகலை பிங்கலை இடையுள சுழுமுனை
திடமிகு சிகுவை, அத்தி, அலம்புடை
சடக்குள சங்கினி, காந்தார், புருடன்
தடம்நிலை குகுவொடு நாடி தசமாம். 27

சாக்கிரம், சுழுத்தி, சலனச் சொப்பனம்
தேக்கிட உந்தியில் தெரிநிலை துரியம்
தூக்கிடும் கொப்பூழ் துரியா தீதம்
ஆக்கை தழுவிய அவத்தை ஐந்தாம். 28

சுடர்மிகு மூலம், சுவாதிஷ் டானம்
அடக்கும் மணிபூ ரகத்தலம், அநாகதம்
விடம்நிலை விசுத்தி, ஆக்ஞை யோடு
அடல்மிகு ஆதா ரங்கள் ஆறாம். 29

## 7. நாடிகள் இயக்கம்

உடல்நடு உறுப்பாம் மூலா தாரம்
தொடங்கித் தொய்விலா நாடிகள் தசமும்
படர்ந்து பல்தொழில் பாங்குடன் நடத்திக்
கடத்தைக் கடவுளோ டிணைத்தும் நிற்குமே. 30

நீடிய தண்டின் இருபுறம் நெறியோடு
ஓடிடும் இடகலை பிங்கலை உயர்ந்தே,
ஈடில் சுழுமுனை இரண்டின் நடுவே
தேடியே அண்டம் திடமாய் ஓடும். 31

கடவுளில் கலந்திடும் ஆஞ்ஞை நண்ணிட
இடகலை பிங்கலை இணைந்தே நின்றிடும்
சுடர்மிகு சுழுமுனை கபாலம் சுற்றி
இடபிங் கலையொடு இணைந்திடும் ஆஞ்ஞை. 32

இதந்தரும் காந்தார் இடக்கண் இருந்திடப்
பதமாய்ப் புருடன் பற்றும் வலக்கண்;
இதயத் தெழுந்திடும் 'ஹஸ்தி' 'ஜிஹ்வா'
அதராய் அமைந்திடக் கண்ணொளி வந்ததே. 33

அத்தி, அலம், புடை, வலம் இடச் செவிகளில்
உத்தியாய் ஒடுங்கிட, இதயம் அனுப்பும்
சத்தி 'பூஷா' சார்ந்திட இடச்செவி
சத்தம் கேட்கும் சக்தி வந்ததே. 34

அந்தமாய் இனக்குறி அனைத்திடும் சங்கினி
உந்தும் இருதயம் உதித்தே பந்தமாய்
வந்துறும் 'இரத்த வியானன்' மருவிடச்
சிந்திடும் சுக்கில சுரோணிதச் சின்னீர் 35

குதத்தில் கூடும் குகுவெனும் நாடி,
இதயத் தெழுந்திடும் 'சினிவா லியொடு'
பதமாய் இணைந்து பணிசெய் திடுமே
இதயம் பல்தொழில் இயக்குவ தறிவாம். 36

மண்டலம் அக்கினி மன்னிய நாடியுள்
உண்ணாக் கதனில் ஒடுங்கும் சிகுவை
உண்ணும் உணவை உள்ளே தள்ளும்
அண்ணா மலையை அணுகும் வழியுமாம். 37

## 8. வாயுக்கள் இயக்கம்

சுடர்மிகு ஆஞ்ஞை தோன்றிப் பிராணன்
தடத்தில் தகவொடு ஆறா தாரம்
நடந்து மீண்டும் நண்ணிடும் ஆஞ்ஞை
உடலொடு உயிரைப் பொருத்துதல் இதுவே. 38

பதமாய் அபான வாயு பாய்ந்திடக்
குதமும் குய்யமும் குறைவறச் செயல்படும்
விதந்திடும் வியானன் வியாபித் தெங்கும்
இதமாய்ப் பரிசம் இசைந்திடச் செய்யும். 39

கண்டம் நின்றே கவள உணவை
உண்டிட வைப்பது உதானன் செயலாம்,
உண்டபின் ஏப்பம் ஒலித்திடச் செய்யும்
கண்ணுறங் கிடவே காரிருள் ஆழ்த்தும். 40

அருட்டும் குறட்டை அதன்செய லாகும்
இருகண் விழித்ததும் இருளை நீக்கிக்
கருவிகள் ஐந்தும் கடத்தில் இயல்பாய்க்
கருமம் செய்வகை காட்டிடும் உதானன். 41

உணவின் சாரம் உடலில் பரவிடக்
கணக்காய்க் கொப்பூழ் நின்றே கருவிகள்
இணக்கமாய் இயங்கச் செய்தல் சமானன்;
நிணத்தை நிறைவாய் வளர்ப்பதும் இதுவே. 42

கண்ணொளி தருதல் கண்டத் திருந்து
உண்டதை வாந்தியாய் ஒறுத்துத் தள்ளல்,
தண்டமாய்த் திமிர்விடல் தாங்கொணா முக்கல்
நண்ணும் சோம்பல் நாகன் செயலே. 43

துன்பமாய் அழுதல், தும்முதல் கிருகரன்
இன்பமாய்ச் சிரித்தல், இமைகளை இயக்குதல்
மன்னிய உடலில் மயிர்க்கூச் செறிதல்
இன்ன செயல்கள் கூர்மன் இயக்கமே. 44

கடத்தில் கபத்தைக் கட்டிடச் செய்து
நடக்கும் சுவாசம் நசித்தல், விக்கல்
அடங்கா தார்த்தெழும் கொட்டா வியுமே
திடமாய் தேவ தத்தன் செயலாம். 45

இருக்கும் நவத்திலும் இணைந்தே **தனஞ்செயன்**
அருமின் **அணுக்கதிர்** அளவொடு நொடிக்கு
இருநூற் றிருபதும் ஏறிய நான்கும்
உருத்தலால் உடலும் உயிரும் இயங்குமே. 46

கடந்தான் வீழ்ந்திடக் காற்றுகள் ஒன்பதும்
கடந்து போயினும் கர்த்தா தனஞ்செயன்
உடலை ஊதி வெடிக்கச் செய்தே
கடமை முடித்துக் ககனம் செல்லும். 47

## 9. மூன்று மண்டலம்

மண்டலம் அக்கினி மருவிடும் மூலம்
மண்டலம் ஆதவன் மருவிடும் இருதயம்
மண்டலம் இந்து மருவிடும் உச்சி
ஒண்பரம் பொருளின் உறைவிடம் உச்சியே. 48

## 10. ஆறு ஆதாரங்கள்

எருவாய், கருவாய், இடையுள கோணம்
பெருந்திரை ஏழுள் பிறங்கும் பச்சை;
நெருப்பாம் குண்டலி நின்மலப் பிரணவம்
அருந்திறல் அடங்கிய **மூலா தாரமாம்.** 49

சரம்நிலை கொப்பூழ் சார்ந்திடக் கீழே
விரற்கடை நான்கில் விளங்கும் பொன்திரை,
பிரம்மா **நகாரப்** பிருத்வியாம் உந்தி,
சுரணை மிகுந்த **சுவாதிஷ் டானம்.** 50

கோலப் பாற்கடல் வெண்திரைக் கொப்பூழ்
மாலவன் **மகார மணிபூ ரகமாம்**;
சீல இருதயச் செந்திரை **சிகாரம்**,
சூல உருத்திரன் சுடரும் **அநாகதம்.** 51

நீல கண்டம் நிகேதன **வகாரம்**
தூல மகேஸ்வரன் துலங்கும் **விசுத்தி**
மேலகக் கருந்திரை மேவிடும் நெற்றியாம்
ஆலயம் **யகார** சதாசிவ **ஆஞ்ஞை**. 52

## 11. பிரம்ம ரந்திரம்

உண்ணா விண்மேல் உச்சியின் கீழுள
மண்டல மதிநடுப் பிரம்ம ரந்திரம்
அண்டன் அருள்நிலை ஆருயிர் அமைந்துள
திண்ணிய பன்னிறத் திரைசூழ் திருத்தலம். 53

அண்ட உச்சி ஆதியாய்ப் பொருந்தி
அண்ணா அடைந்திடும் நரம்பு விழுது
அண்டிட அருள்நிலை இணைத்திடும் ஆஞ்ஞை
விண்ணகம் மேவிடும் வித்தக வழியிதே. 54

## 12. ஆஞ்ஞா ரந்திரம்

மூலம் தொடங்கி மூளை அளாவித்
தூல நெற்றியுள் ரவிமதி துணையொடு
சூலமாய்த் துலங்கும் சுழுமுனை நாடி
ஆலவாய் ஆஞ்ஞா ரந்திரம் அடங்குமே. 55

## 13. ஆன்மா

மண்ணுள மாந்தர் சென்னி மீதினில்
அண்டன் அமர்ந்த பிரம்ம ரந்திரம்
விண்ணின் தொடர்புள வித்தகச் சூத்திரம்;
நண்ணிட ஞானம் நயமாய்த் திறந்திடும். 56

விண்டிட இயலா வியோமச் சோதி
திண்ணமாய்த் தெரியும் சிவலிங் கரூபம்
உண்மை; உண்மை; ஆன்மா இதுவே !
கண்டிடும் இலிங்கம் கடவு ளாமே ! 57

## 14. அறிவு - ஓம்

அகார அச்சரம் ஆதியாம் ஆதவன்;
உகார அச்சரம் உயிர்ப்பாம் ஒண்மதி
இகார அச்சரம் இருகலை இணைப்பாம்
மகார அச்சரம் மதிசேர் அறிவே. 58

ஒட்டும் அகார உகார எழுத்தே
எட்டும் இரண்டும் எனப்பெறும் கலையாம்
மட்டிலா மதிரவி மன்னிய உயிருடன்
ஒட்டும் பிரணவம் ஓமெனப் பெறுமே. 59

## 15. மனம்

வாசி எங்கோ வன்மனம் அங்கே;
வாசி உயர வன்மனம் உயரும்;
வாசி நிலைக்க வன்மனம் நிலைக்கும்
வாசி ஒடுங்க வன்மனம் ஒடுங்கும். 60

கடத்தை அழித்தே காடு சேர்த்திட
திடமாய் முனையும் தீய மனமே
இடக்கால் மடக்கி எண்ணிக் கிடந்திட
விடமது சற்றே விலகி நிற்குமே. 61

## 16. சாக்கிரம், சுழுத்தி, சொப்பனம், துரியம், துரியாதீதம்

உடலின் நனவாம் உணர்வே சாக்கிரம்;
உடல்கிடந் துறங்கிட உறுநிலை சுழுத்தி;
உடலுயிர் ஒன்றிய நிட்டை துரியம்
திடநிலைச் சமாதி துரியா தீதமாம். 62

அடல்மிகு பிராணன் ஆஞ்ஞை கருக்கொள
உடலில் நனவாம் உணர்வு மிகுமே
உடன்படப் பிராணனும் உதானனும் நெஞ்சில்
உடலது இருளில் உறங்கிக் கிடக்கும். 63

கருக் கொளக் கண்டம் காற்றுகள் தசமும்
வருமே மாய வக்கிரக் கனவுகள்
ஒருப்படப் பிராணன் உந்தியில் நிட்டை
ஒருப்படக் கொப்பூழ் உறுவது சமாதி. 64

### 17. பிறப்பும் மறுபிறப்பும்

மன்னிய உலகில் மனிதப் பிறவி
உன்னி உயர்வாய் உருப்பெறக் காரணம்
தன்னை யறிந்து தலைவன் தாளினை
சென்னியில் நினைந்து சீர்பெறு தற்கே. 65

பிறந்த மனிதன் பிணமெனும் பெயருடன்
இறந்த பின்னரும் இணையிலா மானிடப்
பிறவி எடுக்கும் பெருமை ஏனெனின்
பிறவியை அறுத்துப் பிரானடி சேரவே. 66

சரியை முடித்துத் தன்கடம் வீழ்ந்தால்
கிரியை செய்யக் கேட்கும் பிறவி;
கிரியை முடித்தால் கேட்கும் யோகம்;
பரிகொள் யோகம் பற்பல பிறப்பே. 67

இறுதியாய் ஞானம் எய்திட வேண்டி
உறுதி யுடனே உடலெடுத் துழைக்கும்
அறுதி வருங்கால் அதுதான் அடங்கின்
மறுமை யறுத்து மாணடி சேர்ந்திடும். 68

### 18. பிறவியின் கடன்

இக்கடம் நீங்கி இனியொரு கடத்துள்
புக்குப் பிறவாப் புனிதம் எய்தி
எக்காலத்தும் இறையடி இருந்திடத்
தக்கார் அருளொடு தவஞ்செயல் கடனே. 69

முன்னை வினையை முற்றாய் முறித்துப்
பின்னை வினையை பெயர்த்தெறி தற்கே
மன்னிய பரம்பொருள் மாணடி சேர்ந்திட
நன்னெறி ஞானம் நாடுதல் கடனே. 70

## 19. பஞ்சமா பாதகம்

கணவன் இருக்கக் களவு புரிதல்
உணர்வழி மதுவுணல், உயிர்க்கொலை செய்தல்,
கணக்கழி சாட்சியம் கவர்ந்திடும் கொள்ளை
குணமில் ஐவகைக் கொடிய பாவமாம். 71

இன்னா ஐந்தில் எட்டுணை தவறினும்
சென்னியில் உறைவோன் சீற்றம் அடுத்திட
பன்னூ றாண்டு பழகிய தவமும்
அன்றே அடியோ டழிந்து போமே. 72

## 20. சரியை, கிரியை, யோகம், ஞானம்

இல்லற மிருந்து ஆலயம் தொழுது
பல்வகைப் பக்குவம் பெறுதல் சரியை;
மெல்லிய தகட்டில் மேவிய சக்கரம்
சொல்லும் மந்திர சூட்சுமம் கிரியை. 73

ஆவியை அடக்கி ஆயுளைப் பெருக்கி
சாவில் சார்தல் யோக மார்க்கம்
ஆவியைப் பழக்கி ஆலய உடம்புள்
மேவிய மேற்கதி எய்துதல் ஞானமாம். 74

## 21. அஜபா

சுவாசம் உட்புக "ஹம்"மெனச் சுழலும்;
சுவாசம் வெளிவர "ஸ" எனச் செல்லும்;
சுவாசம் சுழுமுனை சூழொலி "ஸ்ஓஹம்"
சுவாச ஒலியறி சூக்குமம் அஜபா. 75

### 22. சுவாச இயக்கம்

இருக்கும் சுவாசம் இயல்பாய் இயங்கிட
ஒருநிமி டத்தில் ஒருபதி னைந்தென
ஒருநாள் முழுதும் உட்புகுந் திழிவது
இருபத் தோரா யிரத்தறு நூறாம். 76

கடத்தி லிருந்து கழியும் அளவைத்
திடமாய் அங்குலக் கணக்கில் தெரிந்திட
இடத்தில் இருப்பின் ஈரா றங்குலம்
நடந்திட நசியும் ஈரெட் டங்குலம். 77

உடல்விரைந் தோடிட இருபத் தைந்தாம்;
உடல்கிடந் துறங்கிட முப்பத் தாறாம்;
உடன்பட மாதொடு எட்டெட் டழியும்;
அடல்மிகு சுவாசம் அழிவதைத் தடுப்பாம். 78

அடக்கியே உடலுள் ஆறிரு அங்குலம்
கடத்தியே கணக்காய் நான்கு அங்குலம்
தடத்துள் எட்டே தங்கிச் சுழன்றிட
உடலின் ஆயுள் ஒருநூற் றிருபதாம். 79

உறுபுலன் ஐந்தும் உள்ளிழு ஆமை
நிறுவிடும் சுவாசம் நிமிடம் மும்முறை
இறுதியில் இறையடி எய்திட எண்ணுவோர்
உறுதியாய் வாசியை ஓர்ந்திட உயர்வரே. 80

### 23. பிராணாயாமம்.

பிராண வாயுவைப் பிடித்து நிறுத்திப்
பிரானடி தொழுதல் பிராணா யாமமாம்
பிராண வாயுவைப் பீடுறப் பேணிடப்
பிராணன் நீளும்; பெருநெறி பிறங்கும். 81

உண்ணா முன்னர் ஒழுங்குடன் வாசியை
எண்ணிரு மாத்திரை நேரம் ஏற்றியே
நண்ணிட அறுபதும் நான்கும் தகைத்து
எண்ணான் களவே இயக்குதல் கணக்காம். 82

அண்டிட ஐம்முறை; அதிகம் இருபதாம்;
உண்ணல், ஓடல், உவத்தல் குறைந்திட
நண்ணா வியாதி; நாதம் பெருகும்
எண்ணம் உயரும்; ஏதம் நீங்கும். 83

## 24. குண்டலி யோகம்

உடலில் குண்டலி சக்தி ஒளிரும்
இடமாம் மூல வடிவம் இயம்பிட
மடப்புள் வட்டம்; மாக்கள் சதுரம்;
கடன்மிகு நரவுடல் கண்டிடக் கோணமாம். 84

கடத்தில் தீச்சிகை கனற்றும் உறுப்பிதே
படமிலா துறங்கும் பாம்பெனப் பின்னிய
அடல்மிகு நரம்புகள் அறுநான்கு இதிலுள்ள
திடமிகு தீட்சணக் குண்டலி இதுவே. 85

அழுத்திட ரவியால் அபானன் கொதித்து,
மழுவாம் அக்கினி மண்டிடும் மூலம்;
விழுதாம் நரம்புகள் விசையாய் அதிர்ந்திட
எழுந்து புடைத்திடும் எற்றிய பாம்பென. 86

கொழுந்தும் குண்டலி யோகம் கூர்ந்திட
எழுங்கனல் உடலில் ஏகமாய்ப் பரவிடும்;
எழுபத் தீராயிரமாம் நரம்புகள்
அழுந்தி அதிர்ந்திட ஆஞ்ஞை திறந்திடும். 87

குண்டலி அஜபை கூடிடக் குணமாம்;
குண்டலி அஜபை கூடா யோகம்
பிண்டம் நடுங்கும்; பித்தம் ஏறும்;
அண்டம் கலங்கி அழிந்தோர் பலரே. 88

## 25. அட யோகம்

உண்ணாக் கூடே உண்ணும் நாவைத்
திண்ணமாய் அடைத்துத் தேனமிர் துண்டிடப்
பண்ணும் பாழ்அட யோகம் தீதாம்
கண்ணது அழிந்திடும், கபாலம் கலங்கிடும். 89

## 26. யோகம் - ஞானம் வேறுபாடு

உண்டிடக் காமம் உறுவது யோகம்;
உண்டிடக் கானல் உறுவது ஞானம்;
அண்டியும் அருள்பெறா மார்க்கம் யோகம்;
கொண்டிட முத்தி கூட்டிடும் ஞானமே. 90

பொன்போல் சுடரும் பொலிவுடை மேனி,
இன்சொல் பேருரை, எண்ணில் சீடர்
இன்னரும் இயல்புடை யோகியர் இறந்து
மன்னிய உலகில் மறுபிறப் பெடுப்பரே. 91

அருமறை ஞானியர் அடைவர் நரைதிரை
உருவம் ஒடுங்கிடும்; ஒண்பொருள் நிலைத்திடும்;
அருகிடும் வாய்மொழி; அந்தகன் அணுகான்;
அருளார் முத்தி அறுதியில் அடைவரே. 92

## 27. உண்மை ஞானியர் இயல்பு

ஆய்ந்தறிந் தடங்கிய ஆன்ற ஞானியர்
ஓய்த லின்றி ஒண்பொருள் நிலைப்பர்
தோய்ந்திடும் மனந்தான் துரியா தீதம்;
பாய்நமன் தீண்டாப் பக்குவம் பெறுவர். 93

தன்னில் ஒடுங்கித் தவஞ்செய் ஞானியர்
தன்புகழ் பேசார்; தன்னை மறைப்பர்;
தன்னில் அடங்காத் தாழ்நிலைப் பொய்யர்
தன்புகழ் பேசுவர்; தருக்கொடு நடிப்பரே. 94

## 28. இல்லற ஞானியர்

இல்லற மென்பது நல்லற மாகும்;
இல்லற மிருந்தே இறைநிலை எய்தியோர்
பல்லோ ருளராம் பார்த்துத் தெரிந்திட
இல்லற ஞானியே ஈடில் வள்ளுவர். 95

இல்லற மிருந்தே வல்வினை யறுக்கக்
கல்வி கற்று கனல்வழி நிற்பின்
வல்லான் மகிழ்ந்து வாழ்த்தி யருள்வன்
செல்கதி சேர்த்து சிறப்புச் செய்வன். 96

## 29. ஞானம் அடைதல் அரிது

கண்காண் கடவுள் தாமே என்பார்
அண்டிட முத்தி அளிப்போ மென்பார்
பண்டமோ முத்தி பகிர்ந்தளித் திடவே?
மண்பரி யேறியோர் மாநதி கடப்பரோ? 97

அருந்தவ ஞானம் அடையும் வழியில்
நெருப்பாம் ஆறு; நீவிட மயிர்ப்புரி;
கருகிப் போமே கவனம் தவறின்
மருவியே மாய அரவம் மாய்க்குமே. 98

கோடியில் ஒருவரே குறியாய் நிலைத்து
ஆடியை அடைந்து, ஆறூர் கடந்து
ஓடியே அண்ணா மலைக்குள் ஒடுங்கி
ஈடிலாச் சோதியில் இரண்டறக் கலப்பர். 99

தன்செயல் தானே தற்பரம் சேர்தல்
தன்செயல் தானே தன்னைக் காண்டல்;
தன்செயல் தானே தவமும் முத்தியும்
தன்செயல் தானே தகவிலா தழிதல். 100

## 30. பெண்டிரும் ஞானமும்

பெண்ணும் ஆணும் பெறலாம் ஞானம்
எண்ணிய அறிவில் இருவரும் சமமே
பெண்டிர் தவம்செயல் பெரிதும் இல்லை;
பெண்டிர் செய்கடன் பெருந்தவ மாகும். 101

தன்மகன் தவப்பலன் தாயைச் சேரும்
தன்னவன் தவப்பலன் தலைவியைச் சேரும்
பன்னி இருவரும் பாதகம் தவிர்ப்பின்
நன்றே உயர்ந்து நற்கதி எய்துவர். 102

## 31. சீடனின் தகுதி

உயரிய ஞானம் ஒழுங்குறப் பயின்றிட
வயதும் கல்வியும் துறவும் வரம்பிலை
மயர்விலா மதிநலம் மன்னிய உறுதி
அயர்விலாக் கண்ணொளி அவசிய மாமே. 103

உண்மைக் குருவை உறுதியாய்ப் பற்றி,
உண்மை ஒழுக்கம் உறுதியாய்க் காத்து
உண்மை தவத்தில் உறுதியாய் நிலைக்க
எண்ணிய இறையடி எய்துதல் உறுதியே. 104

## 32. கற்பவை கற்றல்

இறைநிலை ஞான மறைபொருள் விளக்கம்
முறையொடு கல்லார் முழுமுதல் அறியார்
குறையுடை அறிவு கொடுந்துயர் உய்க்கும்;
நிறைகுரு வின்றி நித்தியம் விளங்கா. 105

கற்கக் கசடறக் கற்பவை என்றே
நற்றிற ஞானி வள்ளுவர் நவின்றது
உற்ற குருவிடம் உறுபொருள் கற்கவே,
கற்றபின் நிற்றலே கடமை யாகும். 106

வேதம் கற்கினும் வேள்வி செய்யினும்
போதப் பரிமொழிப் பொருளை அறியார்
நாதனைக் காணார்; நன்னிலை அடையார்
பாதக மரணம் பற்றுவ ராமே. 107

## 33. குருதுணை

அருளார் ஞானம் அடைந்திடப் புரியும்
அருந்தவந் தன்னை அழிக்க முந்துறும்
உருவாம் மாயை மருவிடா வாறு
குருவின் துணையே குன்றாக் காவலாம். 108

உண்மை ஞானியே உறுபொருள் விளக்குவர்
உண்மை ஞானியே உய்வழி காட்டுவர்
உண்மை ஞானியே உறுதுணை யிருப்பர்
உண்மைத் தவமே உய்கதி சேர்க்கும். 109

## 34. ஞானக் குருவின் இலக்கணம்

நலந்தரும் ஞான குருவை நோக்க,
சலனமில் சிரந்தான் சாய்ந்து காணும்
வலக்கை வந்திடும் மான்மழு சூலம்
வலது முழந்தாள் வாய்த்திடும் மறுவே. 110

இடக்கை இருந்திடும் சங்கொடு சக்கரம்
சுடராம் நெற்றியில் சூல ரேகை
இடநா சியிலும் இடமுது கிலுமே
திடமாய்ப் பார்க்கத் தெரியும் மறுவே. 111

சத்தியச் சாட்சியம் சரியாய்க் காணும்
உத்தம குருவிடம் உறுபொருள் கற்பாம்
சித்துகள் செய்தல் சிறப்புடைச் செயலல
நத்திடும் நாரியர் நாட்டமும் நாசமும். 112

## 35. குரு முகூர்த்தம்

குருவைக் கொண்டிட சுவாதி விசாகம்
விருச்சிகம் கடகம் விளங்கும் நாட்கள்
அருமை என்றே ஆன்றோர் கூறுவர்
உருநாள் ஓர்ந்து குருவடி சேர்வாம். 113

குருவை பணிந்தே குறிகொளக் கேட்பினும்
அருள்நிலை பக்குவம் ஆய்ந்து தெளிந்தே
அருமறை மார்க்கம் ஆற்றுப் படுத்துவர்
திருப்தி யிலையேல் தெரிந்திடச் செய்யார். 114

பாவகம் பயின்றிடப் பக்குவம் பெற்றே
ஆவல் மிகுத்து அறிவு ஏங்கின்
தேவ ஞானியும் தேடி வந்தே
ஈவ தற்கும் இளகுவர் நெஞ்சம். 115

## 36. பாவம் போக்கும் வழி

முன்னைப் பிறப்பிலும் பின்னரும் புரிந்த
வன்கண் வழக்கழிப் பாவச் செயலெலாம்
தன்முன் நின்றே தடுத்திடும் ஞானம்
அன்னோ அகற்றுதல் அரிதாம் செயலே. 116

திருவருள் பிரம்மம் திருவடி பற்றியே
நெருப்பாம் ஞானத் தவத்தில் நிலைத்து
கருத்தாய்க் கானலை நாற்பதம் உயர்த்தின்
இருக்கும் பாவம் எரிந்தே போகும். 117

## 37. மன வடக்கம்

நாதன் நற்றாள் நண்ணுவோர் தமக்கு
மாதர் மோகமே மாய்க்கும் அரவமாம்;
காதலாய் வலிந்து காரிகை தழுவினும்
காதகச் செயலெனக் காய்ந்து விலகுவாம். 118

ஓடும் நிலவில் உறுதியாய் நிலைத்து
ஆடும் காலை அளவொடு நிறுத்திட
ஓடும் மனந்தான் உயரப் போகும்
பாடும் நாதம் பாய்மனம் பிணைக்கும். 119

மனத்தைப் பழக்குதல் மாபெரும் செயலாம்
கனவிலும் நனவிலும் கருத்தொடு நற்றாள்
இனமாம் மதியால் இடையறா தேற்றிட
மனந்தான் மடங்கி செம்மை யுறுமே. 120

## 38. அட்டமா சித்தி

அட்டமா சித்தியுள் **அணிமா** என்பது
எட்டுணை போலும் இறுக்குதல் உடலை
கட்டுடல் பளுவாய்க் காட்டுதல் **கரிமா**
மட்டிலா விசுவ ரூபம் **மகிமா.** 121

கடத்தொடு காற்றில் மிதத்தல் **இலகுமா**;
அடக்கியே ரவிமதி ஆள்வது **பிராப்தி**;
உடலுள உயிரைப் பிரித்து பிறிதோர்
உடலின் உட்புகல் **பிரகாமியமாம்.** 122

ஊனமில் தவத்தால் உயர்ந்த மனிதன்
வானவர் வயம்செயல் **வசித்துவ மாகும்**
மானவன் மாண்பொடு ஐந்தொழில் இயற்றிக்
கோனவன் கூடுதல் **ஈசத் துவமாம்.** 123

## 39. காயகல்பம்

அடர்கனல் அடுத்திட அருட்குழி திறந்திடும்
உடற்பசி கோபம் உலைமனம் ஒடுங்கிச்
சடசஞ் சார சமாதி அமைவுறும்;
அடங்கி அமர்ந்திடக் காய கல்பமே. 124

## 40. காய சித்தி

ஏறியே கானலில் எய்திட அண்டம்
வீறியைம் புலனிலும் விண்ணொளி பரவும்
ஊறிலா நந்தி ஒளிமய மாயிடும்
மாறிலா மாண்புடைக் காய சித்தியே. 125

## 41. குருபதம்

நடக்கும் ஒருபதம் நசித்து வைத்து
மடக்கி மதியை மாறிலா தேற்றி
சுடர்மிகு சுழுமுனை ஆக்கும் இயல்பே
திடமாய்த் தேடும் குருபதக் குறிப்பாம். 126

## 42. விந்து

விந்துவை விட்டிட விழியொளி போகும்
விந்துவை விட்டிட வியோகம் நெருங்கும்
விந்துவைக் கட்டிட விமல னாக்கும்
விந்துவைக் கட்டி வியனுல கடைவாம். 127

## 43. நந்தி

சிந்தை வைத்து சிற்சபை சேர்ந்திட
விந்தை முச்சுடர் வித்தகச் சக்கரம்
உந்திச் சுழன்றிட உள்ளுறை சூக்கும
அந்தர நந்தி அபிமுகம் நிற்குமே. 128

## 44. மெய்ப்பொருள் போதம்

அண்டம் அளாவிய ஐந்நிறப் பூதமும்
நுண்ணிய பொருளில் நுடங்கி நின்றிட
எண்ணென எழுத்தென எழுந்தது மெய்யாம்
நண்ணிட நாதனை நற்றுணை அதுவாம். 129

விண்ணின் நிறமே வித்தகக் கருவரி
மண்ணும் நெருப்பும் பொன்னும் சிகப்பும்;
தண்ணீர் காற்று வெண்மை நீலம்
கண்டிடும் ஐந்நிறம் கடத்துள் மெய்யாம். 130

எந்தை தாயும் இரவியும் மதியும்
வந்ததும் போவதும் வாசி யாகும்
அந்தர எழுத்தே அப்பொரு ளாகும்
சந்திர உயிரே சாற்றும் மறையாம். 131

பொருளறி போதம் புகுமுக நிலையாம்
பொருளுக் கப்பால் அருள்நிலை உளதாம்
பொருளொடு நின்றார் பொற்படி சேரார்
இருளில் மூழ்கி இறந்தே போவார். 132

## 45. தவம்

தூய விளக்கினைச் சுடர்விடச் செய்து
மாய விளக்கினை மறையா திருத்திச்
சேய விளக்கினைத் தேடி கண்டு
காய விளக்கினைக் கனன்றிடச் செய்வாம். 133

உதயன் ஒளிர்முன் உயர்மான் உரிமேல்
பதமாய்ப் பங்கயப் பாவகம் பயின்றே
இதமாய் இலக்கில் இலயமாய் இருந்திடச்
சதமாம் சதாசிவச் சங்கமச் சமாதி. 134

தினமும் சும்மா இருந்திடத் தீர்க்கமாம்
புனலும் வடிந்து பொருளது பொலியும்
மனமதி மயக்கற மாமலை நண்ணிடும்
கனல்தான் ஏறிடக் கண்ணது திறக்குமே. 135

காமப் பாலைக் கடிதாய் நீக்கி,
சோமப் பாலை சுத்தமாய் உண்டு
சேமக் கானற் பாலைச் சேர்ந்திட
நாமயம் பெற்று நாதனை நண்ணுவோம். 136

சென்னியில் உறைவோன் சீர்பதம் துணையொடு
தன்னுடை சூக்குமம் தனியாய்ப் பிரித்துத்
தன்முன் கண்டு தவத்தில் நிலைத்திட
தன்னுடை உச்சி தகவாய்த் திறந்திடும். 137

## 46. அரவு விடம்

விதிநாள் அரவம் வீழ்த்திட முனையும்;
அதிபன் இருப்பிடம் ஆர்வமாய் நினைந்து
மதியால் அடித்து மனத்தை நிறுத்திட
கதிர்மிகுக் கனலால் அரவம் அழியுமே. 138

## 47. அமிர்தம்

ஆன்ற தவத்தால் அண்டம் சேர்ந்து
மூன்று மண்டலம் முழுதாய்த் திறந்து
ஊன்றிட ஐம்புலன் ஓரிடம் மதியொடு
தோன்றும் அமிர்தம் சொட்டிடும் நாவில். 139

சிந்திட அமிர்தம் சிந்தை தெளிவுறும்;
விந்து நாதம் விவிதமாய்க் கேட்கும்;
விந்தை உலகம் விரிவாய்த் தெரியும்;
சிந்தை சிதறார் சீர்பதம் சேர்வரே. 140

## 48. முத்தி நிலை

நெறியாய்த் தவத்தில் நெடுநாள் இருந்திட
அறிவுத் தூலம் அதிபன் அருளால்
குறியாய் நிலைத்திடக் கூடிடும் ஞானம்
பொறிகள் அனைத்தும் புனிதம் அடையும். 141

கருத்தாய் உச்சியில் கானலை உயர்த்திட
அருளொடு திறந்திடும் அண்ணா ரந்திரம்
அருங்கனல் உயர்த்திட ஆறாம் அறிவு
திருச்சிவ லிங்கம் தீர்க்கமாய் இணையுமே. 142

உதிக்கும் ஒளியில் எழுதிரை விலகும்
துதிப்பர் வானவர் தூயோன் என்றே
விதியை வென்று விண்ணவ ராக்கும்
அதிமறை முத்தி ஐக்கியம் இதுவே. 143

## 49. இருவகை மரணம்

இருவகை முடிவு இருப்பது உண்மை;
பொருளில் அடங்கிப் பொலிவது சைவம்;
வருவதில்லை வக்கிர எச்சம்
உருவத் தோற்றம் உறக்கம் போலும். 144

முத்தி பெற்று முழுமை எய்திய
சத்தியர் தம்முடல் சற்றும் அழுகா
அத்தன் அருளால் அமரருள் சேர்வர்
நித்தியம் நறுமணம் நிரம்ப வீசும். 145

இருளில் மூழ்கி இறப்பதே அசைவம்
வருவது எச்சம் வன்கண் தீட்டு
கருவது கலங்கும் கால்கை விறைக்கும்
பருவுடல் வீங்கும்; பரவிடும் நாற்றம். 146

தருமன் தீர்ப்பில் தக்கர் தகவிலர்
இருவர் இயல்பின் இலக்கணம் காணும்
பெருநெறி பெற்றார் பிறவார் மீண்டும்
இருளில் வீழ்ந்தோர் எடுப்பர் பிறவியே. 147

## 50. ஞானியர் உடல் அடக்கம்

அருந்தவ ஞானியர் அடங்கிய பின்னர்
பருவுடல் எரித்தல் பாதகச் செயலாம்
பெருகுமே நாட்டில் பிணியும் பஞ்சமும்
இருத்திடின் நிலவறை இன்னருள் பெறலாம். 148

நிலவறை நிரவுதல் விபூதி தர்ப்பை
இலங்கும் பங்கய இருக்கை வடமுகம்
புலத்தில் அரசுடன் பொலிந்திட ஆலயம்
வலம் வரும் மாந்தர் வரம்பல பெறுவரே. 149

நிலவறை அடக்கம் நிகழ்ந்த நிசிமுதல்
பலமிகு நாகம் பருவுடல் காக்கும்
அலகில் காலம் அடங்கி யிருப்பர்;
உலவுவர்; உள்ளிடும் உத்தமர்க் குதவுவர். 150

## 51. இன்னாச் செயலும் சாபமும்

பத்தினி, சற்குரு, ஞானியர் பதைத்து
சித்தம் நொந்திடச் சிறுமை செய்தவர்
பித்தராய் அலைவர் பெருநோய் வந்துறும்
சத்தியம் நாயாய் சனித்துத் திரிவரே. 151

********************

**ஓம் சக்தி**

**பொருளடக்கம்**


| வரிசை எண் | பொருள் | செய்யுள் எண் | ஆதாரம் |
|---|---|---|---|
| 1. | ஐந்தெழுத்து | 1 | திருமூலர் 966<br>சிவவாக்கியர் 523 |
| 2. | ஐந்தொழில் தெய்வங்கள் | 2-4 | வாலை சுவாமி 68,69 |
| 3. | ஐம்பூத அமைப்பு | 5-7 | நிஜானந்த போதம் |
| 4. | உடலின் தோற்றம் | 8-10 | திருமூலர் 1726, 1750<br>பீர்முகம்மது 1,3,11,14,15<br>சிவானந்த போதம் 58-60<br>நிஜானந்த போதம் |
| 5. | உடலில் நவக்கோள் | 11-13 | நிஜானந்த போதம்<br>சிவவாக்கியர் 227 |
| 6. | தொண்ணூற்றாறு தத்துவங்கள் | 14-29 | பட்டினத்தார் பூரணமாலை 22,<br>இடைக்காட்டுச் சித்தர் 26, 27, 30-32 |
| 7. | நாடிகள் இயக்கம் | 30-37 | சித்தர் பாடல் |
| 8. | வாயுக்கள் இயக்கம் | 38-47 | திருமூலர் 653,654,813<br>நிஜானந்த போதம் 19<br>சித்தர் பாடல் |
| 9. | மூன்று மண்டலம் | 48 | நிஜானந்த போதம் |
| 10. | ஆறு ஆதாரங்கள் | 49-52 | திருமூலர் 580, 584<br>பட்டினத்தார் பூரணமாலை 16<br>அகப்பேய்ச்சித்தர் 11-15<br>வாலைசுவாமி - 48<br>கொங்கணச்சித்தர் 32-36<br>அருட்பெருஞ்சோதி அகவல் 813-824 |
| 11. | பிரம்மரந்திரம் | 53-54 | காகபுசுண்டர் 1-1<br>வாலை சுவாமி 60<br>அருட்பெருஞ்சோதி அகவல் 825-826 |

## ஆசிரியரின் ஆன்மிக நூல்கள்

1. ஞானக்கனல்
2. குணங்குடியாரின் ஞானவழி
3. சித்தர் நூல்களில் அகத்தியர் திருவள்ளுவர் வரலாறு
4. சித்தர் தத்துவம் (தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது)
5. இந்து, கிறிஸ்துவம், இஸ்லாம் ஒருமைப்பாடு
6. திருப்புகழ் காட்டும் முத்தி நெறி
7. வேதம் விளக்கும் தேவ இரகசியம்
8. சதுரகிரியில் கோரக்க சித்தர்
9. சித்தர் உருவில் சிவபெருமான்
10. சைவ சித்தாந்த உண்மை விளக்கம்
11. அருட்பெருஞ்சோதி ஞானச் சித்தர்
12. அருட்பெருஞ்சோதி அகவல் ஞான விளக்கம்
13. வானிலிருந்து வந்தவர் வாழ்வும் ஜோதி வழிபாடும்
14. திருஅருட்பா ஞானவிளக்கம் (முதல் திருமுறை)
15. திருஅருட்பா ஞானவிளக்கம் (இரண்டாம் திருமுறை)
16. திருஅருட்பா ஞானவிளக்கம் (3,4,5 ஆம் திருமுறை)
17. திருஅருட்பா ஞானவிளக்கம் (ஆறாம் திருமுறை)
18. ஜோதி வழிபாடு

**அருட்பெருஞ்சோதி தியான கூடம்**

முதியோர் சரணாலயம்

மொரட்டாண்டி, ஆரோவில் அஞ்சல்

பாண்டிச்சேரி - 605 101